(6 pages) **Reg. No. : ..............................**

**Code No. : 12100** **Sub. Code : R 3 TA 31/ B 3 TA 31**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2012.

Third Semester

Part III — Tamil – Main

Paper V – சமய இலக்கியம்

(For those who joined in July 2008 and afterwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு 50 சொற்களில் விடையளிக்க.

1. பொதுமக்களுக்குரிய வைதீகச் சமய நூல்களாக விளங்கியவை

   (அ) இதிகாசங்கள் (ஆ) வேதங்கள்

   (இ) உபநிஷத்துக்கள் (ஈ) தர்மபதம்

2. மண்ணினை உண்டு உமிழ்ந்தவன்

   (அ) சிவபெருமான் (ஆ) முருகப்பெருமான்

   (இ) திருமால் (ஈ) நான்முகன்

3. ஐம்புலன் ஆணை வழி நின்று தானலதொன்றைத் தானென நினைப்பது எது?

   (அ) உள்ளம் (ஆ) ஆன்மா

   (இ) உடல் (ஈ) அறிவு

4. சிவப்பெருமானின் நடனத்தைக் காண இயலாதவர் யார்?

   (அ) மெய் அன்பில்லார் (ஆ) பற்றினை விடாதார்

   (இ) புண்ணியமில்லார் (ஈ) பொய்க்கிசைந்தார்

5. "ஆதி மூர்த்தியை நாடியே, பாசறவு எய்தி அறிவு இழந்து என்ன"? என்று பாடியவர் யார்?

   (அ) பெரியாழ்வார் (ஆ) நம்மாழ்வார்

   (இ) ஆண்டாள் (ஈ) பொய்கையாழ்வார்

6. தலைவியின் மெய்வந்து நின்று ஆவியை மெலிவிப்பவன் யார்?

   (அ) கைவந்த சக்கரத்து கண்ணன்

   (ஆ) தாரைக்கண் செல்வன்

   (இ) வையமளந்த பிரான்

   (ஈ) மாயவன்

7. செவியிடத்து செல்லும்படி சொரிந்தாலும் மனங்கொள்ளமால் கெடுத்து விடுவது எது?

   (அ) தீவினை (ஆ) ஆணவம்

   (இ) மடமை (ஈ) ஊழ்

8. தேற்றத்திற் கேற்ற காலம் எத்தனை வகைப்படும்

(அ) மூன்று (ஆ) ஆறு

(இ) நான்கு (ஈ) இரண்டு

9. கஃபாவில் நபிகள் நாயகம் வழிபடும்போது ஈனன் ஒருவன் எதனை அவர் மீது எறிந்தான்?

(அ) அழுகு மலச்சாணம்

(ஆ) கல்

(இ) ஒட்டகத்தின் ஊன் குடல் தோல்

(ஈ) சேர்ந்த குப்பை

10. இயேசுபிரான் துறுமலர் சோலைக்குச் சென்று யாருடைய செஞ் சீற்றத்தாரழல் குளித்தார்?

(அ) அண்டர் நாயகன் (ஆ) யூத மன்னன்

(இ) யூத மதக்குரு (ஈ) யூத மக்கள்

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு 250 சொற்களில் விடையளிக்க.

11. (அ) பக்தி இயக்கம் எவ்வாறு சமண, பௌத்த மதங்களின் வீழ்ச்சிக்குக் காரணமாகியது?

(அல்லது)

(ஆ) வாளா மாய்ந்து மண்ணாகிக் கழிவரே எனவும் காக்கைக்கே யிரையாகிக் கழிவரே எனவும் திருநாவுக்கரசர் கூறுவது யாரை?



12. (அ) தாயுமானவர் தம் கவலையினை எவ்வாறு சிவபெருமானிடம் எடுத்துரைக்கிறார்.

(அல்லது)

(ஆ) அருள் விளக்கமாலையின் தத்துவச் சிறப்பினைக் பாராட்டுக.

13. (அ) கண்ணனது தொண்டையழகை விவரி.

(அல்லது)

(ஆ) இரவு நீடித்தமையால் திருமாலைப் பிரிந்த தலைவியின் வருத்தத்தைப் புலப்படுத்துக.

14. (அ) தானமும், அருந்தவமும் யாருக்குரியது?

(அல்லது)

(ஆ) மேரு போன்ற பெரும் பயனை நல்குவது எது?

15. (அ) அந்தகர்க்கும், பொல்லாப் புலையருக்கும் நபிகள் நாயகம் செய்தது என்ன?

(அல்லது)

(ஆ) போற்றி திருவிருத்தங்களின் இலக்கிய சிறப்பினை விவரி.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு 600 சொற்களில் விடையளிக்க.

16. (அ) நிலையாமைக் கொள்கை இந்தியச் சமயங்களில் பெறும் முக்கியத்துவத்தை விளக்குக.

(அல்லது)

(ஆ) திருவாரூரில் சென்று, இறைவனைத் தொழுவது என்று? என சுந்தரர் ஏங்குவதை விவரி.

17. (அ) பத்திரகிரியார் பாடல்களில் பயின்று வரும் உலகியல் உண்மைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வள்ளலார் இறைவனின் பெருமைகளை எவ்வாறு விளக்குகிறார்.

18. (அ) குழந்தை கண்ணனைச் செங்கீரை ஆடுமாறு பெரியாழ்வார் வேண்டுவதனைத் தொகுத்து வரைக.

(அல்லது)

(ஆ) திருமால் மீது தலைவி கொண்டுள்ள காதலைப் புலப்படுத்துக.

19. (அ) யாக்கை, உயிர், பகுத்துண்ணல், காமநுகர்வு ஆகியன பற்றிய சீவகன் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) புத்தர் பெருமனது சிறப்பினையும், பௌத்தக் கொள்கைகளையும் அறவண அடிகள் எவ்வாறு மணிமேகலைக்கு உபதேசிக்கிறார்.



20. (அ) செய்குத் தம்பி பாவலரது 'நபிகள் நாயகம் மான்மிய மஞ்சரி வாயிலாகத் தெரியவரும் நபிகள் நாயகத்தின் வரலாற்று நிகழ்வுகளைத் தொகுத்துரை.

(அல்லது)

(ஆ) போற்றி திருவிருத்தங்கள் வாயிலாகத் தெரியவரும் விவிலிய நிகழ்வுகளை விவரி.

———————